# ஹுதைபா அல் யமானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கக்கூடிய 'குழப்பமான மற்றும் நல்ல காலங்கள்' தொடர்பான ஹதீஸ்கள் தொடர்பான ஜமாஅதுல் முஸ்லிமீனின் கண்ணோட்டம்.

ஹுதைபா அல்யமானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கக்கூடிய 'குழப்பமான மற்றும் நல்ல காலங்கள்' தொடர்பான ஹதீஸ்களானவை ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அபூதாவூத் எனும் கிரந்தத்தில் 4244, 4246 ஆகிய இலக்கங்களிலும் முஸ்னத் அஹ்மத் எனும் கிரந்தத்தில் 23282, 23425, 23429 ஆகிய இலக்கங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. முஸ்னத் அஹ்மத் மற்றும் அபூதாவூத் ஆகிய கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸ்களைப் பொருத்தளவில் இந்த ஹதீஸ்களை அறிவிக்கக்கூடிய அறிவிப்பாளர்களில் ஒருவரான 'காலித் இப்னு சுபைஃ. அல்லது சுபைஃ. இப்னு காலித் அல்லது அல்யஷ்குரி' என்ற அறிவிப்பாளர் வரக்கூடிய ஹதீஸைப் பொருத்தளவில் ஹதீஸ்கலையில் மிகவும் உறுதியான இமாம்கள் எவரும் இவரை 'உறுதியானவர்' (ஸிகத்) என்று குறிப்பிடவில்லை. இமாம் இப்னு ஹிப்பான், இமாம் இஜ்லி ஆகிய இருவர் மாத்திரம் தான் இவரை 'உறுதியானவர்' என்று குறிப்பிடுகின்றார்கள். இமாம் இப்னுஹிப்பான், இமாம் இஜ்லி ஆகியோர் மாத்திரம் 'உறுதியானவர்' என்று கூறக்கூடிய அறிவிப்பாளர்களைப் பொருத்தவரை ஹதீஸ்கலையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அதாவது, 'அறிமுகம் இல்லாதவர்களையும் உறுதியானவர்' என்று கூறக்கூடிய தன்மை இந்த இருவரிடமும் காணப்படுகின்றது. அத்துடன், இந்த அறிவிப்பாளர் அறிவிக்கக்கூடிய அறிவிப்புகளைப் பொருத்தளவில் அவை மிகவும் குறைவாக உள்ளமையும் மற்றுமொரு குறைபாடாகும். மேலும், இந்த அறிவிப்பாளர் அறிவிக்கக்கூடிய அறிவிப்புகளைப் பொருத்தளவில் ஹதீஸின் உள்ளடக்கத்திலும் (மதன்) சில குறைபாடுகள் காணப்படுகின்றன. ஒரு சில அறிவிப்புக்களைப் பொருத்தளவில் "பித்னாக்கள் - குழப்பங்கள் உடைய காலத்தில் வாள்தான் தீர்வு" என்று சொல்லக்கூடிய அமைப்பில் அவைகள் காணப்படுகின்றன. ஆனால், குழப்பங்கள் நிறைந்த காலத்தில் "அல்லாஹ்வின் வேதத்தைக் கற்றுக்கொண்டு அதன்படி செயல்படு" என்று கூறக்கூடிய அமைப்பில் முன்னர் கூறப்பட்ட செய்திக்கு மாற்றமான அமைப்பில் இன்னும் சில ஹதீஸ்கள் காணப்படுகின்றன. மேலும், இந்த ஹதீஸ்களில் காணப்படக்கூடிய மற்றுமொரு முரண்பாடு என்னவென்றால், நல்ல காலத்தில் நபி ﷺ அவர்களினால் கூறப்பட்ட அடையாளங்களைக் குறித்த அறிவிப்பாளர் தீய காலத்தில் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு உள்ளடக்கம் - மதன் ரீதியாகவும் அறிவிப்பாளரின் தன்மை தொடர்பாகவும் உறுதியான நிலை இன்மையினாலும் அபூதாவூத் மற்றும் முஸ்னத் அஹ்மதில் வரக்கூடிய செய்திகளில் குறைபாடுகள் காணப்படுகின்றமை உறுதியாகின்றது. அத்துடன், ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய கிரந்தங்களில் குறித்த காலங்கள் தொடர்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸ்களே எவ்வித குறைபாடுகளும் அற்ற நம்பகமான செய்திகள் என உறுதி செய்யப்படுகின்றன.

அடுத்ததாக, ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய ஹதீஸ் கிரந்தங்களில் வரக்கூடிய ஹுதைபா அல் யமானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் 'நல்ல காலத்தில் காணப்படக்கூடிய தகன் - குழப்பநிலை' தொடர்பான விடயமாகும்.

அந்த ஹதீஸில் நல்ல காலம் குறித்து நபி ﷺ அவர்கள் வர்ணிக்கும் போது அந்த நல்ல காலத்தில் ‘‘தகன் அதாவது, குழப்பநிலை காணப்படும்” எனக் கூறுகின்றார்கள். மேலும், ‘‘என்னுடைய சுன்னாவை எடுத்து நடக்க மாட்டார்கள். என்னுடைய சுன்னா அல்லாத வேறு வழிமுறைகளைக் கடைப்பிடிப்பார்கள் - எனது வழிகாட்டல்படி அல்லாமல் வேறு வழிமுறைகளினால் வழிகாட்டுவார்கள்” எனவும் கூறுகின்றார்கள். இங்கு நபியவர்களின் சுன்னா அல்லாத வேறு வழிமுறை என்பது என்ன? மார்க்கத்தில் புதிய புதிய சுன்னாக்களை உண்டாக்குவதா? அல்லது அவை நிர்வாகம் தொடர்பான புதிய வழிமுறைகளா? என்று நோக்கும்போது அவை ‘நிர்வாகம் தொடர்பான புதிய வழிமுறைகள்’ என்பதே பொருத்தமானதாகும். ஏனெனில், மார்க்க விடயத்தில் ஒன்றைக்கூட்டுவதற்கோ அல்லது குறைப்பதற்கோ மார்க்க ரீதியாக எவருக்கும் அனுமதி கிடையாது. அதாவது, நபியவர்களின் மார்க்க ரீதியான சுன்னாவைப் பொருத்தவரை அவை அல்லாஹ்வினால் பூரணப்படுத்தப்பட்டதாகும். அதில் ஒரு புதிய சுன்னாவைக் கொண்டு வருவதற்கு யாருக்கும் எவ்வித அதிகாரமும் கிடையாது. அவ்வாறு மார்க்கத்தில் புதிய விடயங்கள் ஏற்படுத்தப்படுமானால் அவை பித்அத்தாக மாறிவிடும். எனவே, நல்ல காலத்தில் காணப்படும் குழப்பநிலை என்பது மார்க்க ரீதியான புதிய சுன்னா என்று கருத முடியாது. அப்படியென்றால் நாங்கள் அதனை எவ்வாறு பார்க்க வேண்டும் என்றால், நிர்வாக ரீதியான சில நடைமுறைகள் நபி ﷺ அவர்களின் நிர்வாக முறைக்கு மாற்றமாக வேறு புதிய கோணங்களில் உருவாக்கப்பட்டு அவற்றைக் கொண்டு மக்களை நிர்வாக ரீதியாக வழிநடத்துவார்கள். அவ்வாறுதான் அந்த ஹதீஸை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறான வழிநடாத்தலில் சில விடயங்கள் நல்ல விடயங்களாகவும் சில விடயங்கள் கண்டிக்கப்படக்கூடிய - தவறான செயற்பாடுகளாகவும் காணப்படும் என நபி ﷺ அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். புதிய விடயங்கள் மார்க்க விடயங்களாக இருந்தால் அவை பித்அத்துக்களாக ஆகிவிடும்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்.

**“…**செய்திகளில் மிகவும் உண்மையானது அல்லாஹ்வுடைய வேதமாகும். நடைமுறையில் மிகவும் சிறந்தது முஹம்மதாகிய எனது நடைமுறையாகும். காரியங்களில் மிகத்தீயது (மார்க்கம் என்ற பெயரில்) புதிதாக உருவானவையாகும். புதிதாக உருவாக்கப்படும் அனைத்தும் பித்அத்துகள் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். ஒவ்வொரு வழிகேடும் நரகத்தில் கொண்டு சேர்க்கும்…”
நஸாஈ : 1578, இப்னு குஸைமா : 1785.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், ஒரு நபித்தோழருக்கு நபி ﷺ அவர்கள் பித்அத் செய்யக்கூடிய இமாமுடைய விடயத்தில், ‘‘அல்லாஹ்வுக்கு மாறு செய்பவருக்கு எவ்விதச் செவிமடுத்தலும் கட்டுப்பாடும் இல்லை” எனக் கூறுகின்றார்கள்.
**“**எனக்குப் பிறகு சிலர் உங்களுக்குத் தலைவர்களாகத் தோன்றுவார்கள். அவர்கள் நபிவழியை அழித்து**,** பித்அத்தைத் தோற்றுவிப்பார்கள். தொழுகையை அதற்குரிய நேரத்தை விட்டும் தாமதப்படுத்துவார்கள் என அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள். அப்போது நான் அல்லாஹ்வின் தூதரே! நான் அவர்களை அடைந்தால் என்ன செய்வது? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் உம்மு அப்தின் மகனே

**“அல்லாஹ்வுக்கு மாறு செய்பவருக்கு கீழ்ப்படிதல் இல்லை”** என்று மூன்று முறை கூறினார்கள். இப்னுமாஜா : 2865

ஆகவே, மார்க்க விடயத்தில் எவ்விதமான கூட்டல்களையும் ஏற்படுத்த முடியாது. நபி ﷺ அவர்கள் இந்த இடத்தில் மார்க்க ரீதியான சுன்னாவைக் கூறவில்லை. இது முழுக்க முழுக்க நிர்வாகம் சார்ந்த விடயங்களைத்தான் நபி ﷺ அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். நிர்வாகம் சார்ந்த விடயங்களைப் பொருத்தளவில் அமீர்மார்கள் சில தவறுகளை விடுவார்கள். அமீர்மார்களின் அநியாயங்களுக்குத் துணை நிற்கக்கூடாது. அதேபோன்று, அவர்களுடைய பொய்களை உண்மைப்படுத்தவும் கூடாது. இவ்வாறு யார் பொய்களை உண்மைப்படுத்துகின்றார்களோ அவர்கள் மறுமை நாளில் ஹவ்ளுல் கவ்தரில் நீர் அருந்தும் பாக்கியத்தைப் பெறமாட்டார்கள். இவ்வாறான அமீர்மார்கள் தோன்றுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நாங்கள் “செவிமடுக்க வேண்டும், கட்டுப்பட வேண்டும். ஆனால், அவர்களுடைய அநியாயங்களுக்குத் துணை போகக்கூடாது. இதுதான் அந்த நிர்வாக ரீதியாக அவர்கள் செய்யக்கூடிய பிழையாகும். நிர்வாக ரீதியாக அவர்களிடம் ஏற்படக்கூடிய தவறுகள் அல்லது பிழைகளில் கண்டிக்கப்படக்கூடிய விடயம் என்னவென்றால், ‘அநியாயமான விடயங்களைச் செய்வார்கள். அதேபோன்று, சில பொய்களை உண்மையாகுவார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் அவர்களுக்கு ‘செவிமடுக்க வேண்டும். கட்டுப்பட வேண்டும். ஆனால், அவர்களுடைய அந்த அநியாயங்களுக்குத் துணை போகக்கூடாது’ என்ற விடயம்தான் இங்கு கூறப்படுகின்றது. இந்த விடயம் நபி ﷺ அவர்களுடைய சுன்னாவுக்கு நேர்மாற்றமான விடயமாகும்.

எனவே, மார்க்கத்தில் எப்போது பித்அத்துகள் அதிகரிக்கின்றதோ - பித்அத்துகள் மார்க்கமாக ஆக்கப்படுகின்றதோ அந்த சந்தர்ப்பத்தில் செவிமடுத்து கட்டுப்படல் கிடையாது. காரணம், அது ஷிர்க்காக மாறிவிடும். அந்தக்கூட்டம் ஒரு பிரிவாக மாறிவிடும். அந்தச் சந்தர்ப்பத்தில் நிலைமையைக் கருத்தில் கொண்டு முஸ்லிம்கள் தலைமைத்துவத்தை மாற்ற வேண்டும். அல்லது அந்தப் பிரிவை விட்டும் முஸ்லிம்கள் ஒதுங்க வேண்டும். அந்தவகையில் ஸஹீஹ் முஸ்லிமில் வரக்கூடிய ஹதீஸில் நபியவர்களின் சுன்னா அல்லாத வேறு சுன்னா என்பதும் நபியவர்களின் வழிமுறை அல்லாத வேறு வழிமுறை என்பதும் நிர்வாக ரீதியான விடயங்களைத்தான் குறிக்கும் என்பது மேற்படி விடயங்கள் மூலம் உறுதியாகின்றன.